**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.61/2019

**16.03.2026**

## D.W.2- செல்வக்குமார்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் விக்கிரமங்கலம், மம்பட்டிப்பட்டி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை. வழக்கின் தன்மை தெரியாமல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கானது கிரைய ஒப்பந்தம் செய்ததால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார், அதை தெரியாமல் நிரூபண வாக்கமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிரூபண வாக்கமூலத்தில் சொல்லியுள்ள 2வது பாராவிற்கும், தாவா வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரைய ரத்துப்பத்திரத்தில் நான் 2வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளதாக சொல்லியுள்ளேன். மேற்படி ரத்துப்பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று படித்துப் பார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் மேற்படி நில சுவான்தார் ஞானம்மாள் பெற்றிருந்தா முன்பணம் ரூ.3 லட்சத்தை திரும்ப மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தில் கண்ட வாய்தாவிற்குள்ளாகவே நம்மில் 2வது நபர், 1வது நபருக்கு செலுத்தி, 1வது நபர் பெற்றுவிட்டார் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பணம் கொடுத்தாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும் பணம் கொடுத்ததற்கான ரசீது எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 25.11.2013ம் தேதி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்ததாக கூறியுள்ள அதே தேதியில் வாதியிடம் ரூ.3 லட்சம் பெற்றுத்தான் 1வது பிரதிவாதியின் பவர் ஏஜென்ட் துரைப்பாண்டி என்பவர் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதியின் பவர் ஏஜென்ட் துரைப்பாண்டிக்கு கொடுத்திருந்த பொது அதிகார பத்திரத்தை, 27.12.2013ம் தேதி ரத்து செய்தார் என்றால் ஷஷ

சரிதான். 1வது பிரதிவாதி ரூ.3 லட்சம் பெற்றார் என்றால் சரிதான். நான் துரைப்பாண்டியிடம் பணம் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் ரசீது வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.16 18:20:41 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.